## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் – உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவித்தொகை - உயர்த்தி வழங்கி – ஆணை - வெளியிடப்படுகிறது.


---

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.6)துறை

அரசாணை (நிலை) எண். 108 நாள். 23 .12.2021.

பிலவ ஆண்டு
மார்கழி 8-ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2052.

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.71, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.6)துறை, நாள் 11.06.2007.
2. அரசாணை (நிலை) எண்.47, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.6)துறை, நாள் 04.04.2008.
3. அரசாணை (நிலை) எண்.112, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.6)துறை, நாள் 24.09.2008.
4. அரசாணை (நிலை) எண்.30, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.6)துறை, நாள் 25.02.2021.
5. மேலாண்மை இயக்குநர், வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் அவர்களின், கடிதம் ந. க. எண். S3/7969/2010, நாள் 10.08.2021 மற்றும் 21.10.2021.

*************

**ஆணை.**

மாண்புமிகு அமைச்சர் ஆதிதிராவிடர் நலம் அவர்கள் 2021-2022--ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை விவாதத்தின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார் :-

"தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் கீழ் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும், அவர்களைச் சாந்தவர்களுக்கும், இதுவரை வழங்கப்பட்டு வந்த இயற்கை மரண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, முதியோர் ஓய்வூதியம் மற்றும்

த.பி.பா.

ஈமச்சடங்கு உதவித் தொகை ஆகிய நலத்திட்ட உதவிகள் இதர நல வாரியங்களால் வழங்கப்பட்டு வரும் உதவித் தொகைக்கு இணையாக ரூ.1.53 கோடி செலவில் உயர்த்தி வழங்கப்படும்."

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் துப்புரவுப் பணியாளர்கள் மறு வாழ்விற்காக அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் 13 மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள் 11 பேர் கொண்டு மூன்று ஆண்டுகளுக்கு தூய்மைப் பணி புரிவோர் நல வாரியம் அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தூய்மைப்பணி புரிவோர் நல வாரியத்தில் உறுப்பினர் சேர்த்தல் பதிவினை சரிபார்த்தல் மற்றும் தூய்மைப் பணிபுரிவோர் மற்றும் அத்தொழிலில் ஈடுபட்டுள்ள இதர தொழிலாளர்களுக்கு நல உதவிகள் வழங்கி அரசு ஆணை வெளியிடப்பட்டது.

4. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியத்தில் பல்வேறு நல உதவிகள் செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

5. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டு திரு.கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்களை உப தலைவராகவும் 13 அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் 14 அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்டு உப தலைவருக்கு குறைந்தபட்சம் அலுவலக வசதி, மகிழுந்து மற்றும் மதிப்பூதியம் தாட்கோ மூலம் வழங்கவும் அரசு ஆணை வெளியிடப்பட்டது.

6. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட தாட்கோ, மேலாண்மை இயக்குநரின் கடிதத்தில் தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நலவாரியத்தில் வழங்கப்படும் உதவித்தொகைகள், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியம் மற்றும் 16 நல வாரியம் மூலம் வழங்கப்படும் உதவித்தொகைக்கு இணையாக உயர்த்தி வழங்க ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டார்.

7. தாட்கோ, மேலாண்மை இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு அதன் அடிப்படையில், "தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் கீழ் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும், அவர்களைச் சாந்தவர்களுக்கும், இதுவரை வழங்கப்பட்டுவந்த இயற்கை மரண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை,

திருமண உதவித் தொகை, முதியோர் ஓய்வூதியம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை ஆகிய நலத்திட்ட உதவிகள் இதர நல வாரியங்களால் வழங்கப்பட்டு வரும் உதவித் தொகைக்கு இணையாக ரூ.1.53 கோடி செலவில் உயர்த்தி வழங்கி அரசு ஆணையிடுகிறது. உயர்த்தப்படும் உதவித்தொகை குறித்த விவரம் இவ்வரசாணையுடன் இணைக்கப்பட்டுள்ள, இணைப்பு – I இல் உள்ளது.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.குஎண். 58046/நிதித் (ஆதிமபந)துறை/2021, நாள்.22.12.2021 -இல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்:-**

ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், சென்னை-600 018.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-600 005.
முதன்மை கணக்காயர் (G & SSA), சென்னை-600 018.
மாநில கணக்காயர், சென்னை-600 009/18/35.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை-600 009

**நகல்:-**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
அமைச்சர் (ஆதிந) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர்,சென்னை-600 009.
நிதித்(ஆதி(ம)பந) வ.செ.பொ-I/வ.செ.பொ-II/வ.வ.I)துறை, சென்னை – 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந5)துறை,சென்னை- 600 009.
சிறப்பு திட்டம் செயலாக்கத் துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு/உபரி நகல்.

கா. செல்வராணி
27/12/2021
பிரிவு அலுவலர்.

27/12/2021

## இணைப்பு - I

**அரசாணை (நிலை) எண். 108, ஆதி(ம)பந (ஆதிந.6) துறை, நாள். 23.12.2021**

**தூய்மைப்பணியாளர் நல வாரியத்தால் வழங்கப்படும்**

**உதவித்தொகை உயர்த்தி வழங்கும் விவரம்**

| வ. எண் | நலத்திட்டத்தின் பெயர் | இதுவரை வழங்கப்படும் தொகை | உயர்த்தி வழங்கப்படும் தொகை |
|---|---|---|---|
| 1. | பணியிடத்தில் விபத்து/மரணம் உறுப்புகளை இழந்தால்/சரி செய்ய இயலாத அளவு இழத்தல் | ---------- | 5,00,000 |
| | ஒரு கையினை இழந்தால் | 50,000 | 1,00,000 |
| | ஒரு காலினை இழந்தால் | 50,000 | 1,00,000 |
| | ஒரு கண் முழுவதும் சரிசெய்ய முடியாத அளவு பார்வை இழப்பு | 50,000 | 1,00,000 |
| | ஏனைய காயங்கள் ஏற்பட்டு முழு இயலாமைக்கு | 25,000 | 1,00,000 |
| 2. | இயற்கை மரண உதவித்தொகை | 15,000 | 20,000 |
| 3. | ஈமச்சடங்கு உதவித்தொகை | 2,000 | 5,000 |
| 4. | முதியோர் ஓய்வு ஊதியம் | 400 | 1,000 |
| 5. | திருமண உதவித் தொகை தொழிலாளர் (அ) மகன் (அ) மகள் (குடும்பத்திற்கு இருமுறை மட்டும் | | |
| | ஆண் | --- | 3,000 |
| | பெண் | 2,000 | 5,000 |
| 6. | கல்வி உதவித்தொகை (இருபாலர்) | | |
| | முறையான பட்ட மேற்படிப்பு | 2,000 | 4,000 |
| | விடுதியில் தங்கி படித்தால் | 3,000 | 5,000 |
| | தொழில் நுட்ப பட்டப் படிப்பு | 2,000 | 4,000 |
| | விடுதியில் தங்கி படித்தால் | 4,000 | 6,000 |
| | தொழில் நுட்ப பட்ட மேற்படிப்பு | 4,000 | 6,000 |
| | விடுதியில் தங்கி படித்தால் | 6,000 | 8,000 |
| | மொத்தம் | **2,15,400** | **9,67,000** |

// உண்மை நகல் //

கொ. செல்வராணி 27/12/2021

பிரிவு அலுவலர்.

27/12/2021